







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் சென்னை பத்திரிகையாளர் மன்றம் இணைந்து நடத்திய ஊடகவியலாளர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.25 ஆயிரம் பரிசுத்தொகை காசோலைகள் மற்றும் கோப்பைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், விஜய் வசந்த், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எம். அண்ணாதுரை, சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் எம். சுரேஷ் வேதநாயகம், பொதுச்செயலாளர் எம். ஆசிப், பத்திரிகையாளர் மன்ற நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள் உடனிருந்தனர்.

## சென்னை பத்திரிகையாளர்கள் மன்ற உட்கட்டமைப்பை மேம்படுத்த

# கழக அரசு சார்பாக ரூ.2 கோடியே 50 லட்சம் நிதி!

## பத்திரிகையாளர் கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு விழாவில் –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,ஏப்.7-

**சென்னை பத்திரிகையாளர் மன்றம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு, முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.25 ஆயிரம் எனப் பரிசுத்தொகையையும் – கோப்பை – கேடயத்தையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர், “பத்திரிகையாளர்களின் பணிச்சூழலுக்கு இடையே உடல் நலம் - மனநலம் பேணுகின்ற வகையில், இந்த கிரிக்கெட் போட்டியை சிறப்பாக நடத்திய சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்குப் பாராட்டுகள்! பத்திரிகையாளர் நலனுக்கு, தி.மு.கழகமும் - திராவிட மாடல் அரசும் என்றும் துணை நிற்கும்” என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து “முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்திட, தமிழ்நாடு அரசு சார்பில் ரூ 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்” என்ற அறிவிப்பையும் வெளியிட்டார்.

சென்னை பத்திரிகையாளர் மன்றம் நடத்திய `கிரிக்கெட் போட்டிப் பரிசளிப்பு விழா’வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

### விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள்!

இந்த நிகழ்ச்சி சென்ற மாதம் 9-ஆம் தேதியே நடைபெற வேண்டியது, அப்போது சிறிது உடல் நலம் சரியில்லை. அவர்களிடத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “இந்த வாரம் என்னால் வர முடியாது, பரிசளிப்பு விழாவை நடத்திக் கொள்ளுங்கள்” என்று சொன்னேன். அப்போது, ``இல்லை! நாங்கள் ஒரு வாரம் தள்ளிக் கூட நடத்துகிறோம். எங்களுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் கண்டிப்பாக வந்தே ஆக வேண்டும்” என்று விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள்.

நானும் அவர்கள் மிகவும் பிரியத்துடன், ஆர்வத்துடன் அழைக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு, எனக்கு இருந்த மற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் தள்ளிவைத்துவிட்டு, இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆசையாக வந்தேன். வந்த பிறகுதான் தெரிகிறது, அவர்கள் வேறொரு எண்ணத்துடன் என்னை அழைத்திருக்கிறார்கள் என்று. தவறில்லை, அவை அவர்களின் தனிப்பட்ட கோரிக்கைகளாக இல்லை.

### எனது வாழ்த்துகள்

பல ஆண்டுகளுக்கு பிறகு இந்த மன்றத்திற்குத் தேர்தல் நடந்தது. அதற்கு எனது வாழ்த்துக்களை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தேர்தலை சிறப்பாக நடத்தி அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்து நிர்வாகிகளுக்கும், இந்த நேரத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

58 அணியினர் பங்கேற்ற ஒரு சிறப்பான கிரிக்கெட் போட்டியை நடத்தியதற்கு முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிரிக்கெட் போட்டியில் வென்றவர்கள், பரிசு பெற்றவர்கள், கலந்து கொண்டவர்கள், இதை சிறப்பாக நடத்திக் காட்டிய நிர்வாகிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நடுவர்களின் விளையாட்டுப் போட்டி

பொதுவாக விளையாட்டுப் போட்டிகளில் நடுவர்கள் இருப்பார்கள். ஆனால், நடுவர்களே இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டுள்ளார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நான் ஏன் நடுவர்கள் என்று சொல்கிறேன் என்றால், நடுநிலையோடு பாரபட்சம் பார்க்காமல், உண்மையான செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது பத்திரிகை நண்பர்களாகிய நீங்கள்தான். அதனால்தான் ‘நடுவர்கள்’ என்று குறிப்பிட்டேன். குறிப்பாக, உடல் நலம், மன நலம் இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

### மறக்க முடியாத அடையாளம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இன்றுவரை எத்தனையோ அடையாளங்கள் இருந்தாலும், தவிர்க்க முடியாத, மறக்க முடியாத ஓர் அடையாளம் என்றால், அவரின் பேனாவைச் சொல்லலாம். அதேபோல் இங்கு வந்திருக்கின்ற பத்திரிகையாளர்கள் உங்கள் அத்தனைபேருக்கும் ஒரு அடையாளம் என்றால், அந்தப் பேனாவைதான் அடையாளமாகச் சொல்ல முடியும்.

அதேபோல, இங்கு விளையாட்டுத்துறை அமைச்சர், துணை முதலமைச்சர் என்ற பெருமையை விட, இன்னொரு மிகப்பெரிய பெருமை இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் எனக்கு இருக்கிறது. அது என்னவென்றால், நானும் ஒரு பதிப்பாளர். பத்திரிகையுடன் தொடர்பு கொண்டவன் என்ற உரிமையுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன்.

### மூத்த பிள்ளை `முரசொலி’

கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியில் தலைமை நிர்வாகியாக பல வருடங்கள் பணியாற்றி உள்ளேன். அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் இங்கு வந்து இருக்கிறார்கள். கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளராக வந்து இருக்கிறார் என்று நினைத்தேன். வந்த பிறகுதான் தெரிகிறது. இரண்டு பத்திரிக்கை முதலாளிகள் வந்திருக்கிறார்கள். நண்பர் விஜய் வசந்த் வந்து இருக்கிறார். அவர்கள் இருவருக்கும் இந்த நேரத்தில் எனது வாழ்த்துக்களையும்,



கலந்து கொண்டமைக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பல்வேறு கோரிக்கைகள்

இப்போது கூட, முரசொலியில் கடைசிப் பக்கத்தில், தி.மு.கழக இளைஞர் அணியின் சார்பாக `பாசறை’ பக்கத்தை தொடங்கி, வரலாற்றுச் செய்திகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அவற்றைத் தொகுத்து ‘முத்தமிழறிஞர் பதிப்பம்’ மூலமாக நூல்களாகவும் வெளியிட்டு வருகிறோம். எனவே அந்த உரிமையுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறீர்கள். நம் அரசு அமைந்த பிறகு, பத்திரிகையாளர்கள் நலனுக்காகச் செயல்படுத்துகின்ற திட்டங்களில் ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது அரசு அமைந்ததுமே `பத்திரிக்கையாளர் நல வாரியம்’ அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்த வாரியத்தின் மூலமாக இதுவரை 11 லட்சம் ரூபாய் அளவிற்கு நலத் திட்ட உதவிகளை, அரசின் சார்பாக வழங்கி இருக்கிறோம்.

நானும், அண்ணன் சேகர் பாபு அவர்களும் இதே அரங்கத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறோம். மூத்த பத்திரிக்கையாளர் சண்முகநாதன், வி.என்.சாமி, நக்கீரன் கோபால் உள்ளிட்ட மூத்த பத்திரிகையாளர்களுக்கு `கலைஞர் எழுதுகோல் விருதுகள்’ வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் ரூபாயாக இருந்த பத்திரிக்கையாளர் ஓய்வூதியத் தொகையை நம் அரசு அமைந்த பிறகு 12 ஆயிரம் ரூபாயாக, முதலமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுத்தார்.

பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 5 ஆயிரத்திலிருந்து 6 ஆயிரமாக உயர்த்தப்பட்டதும் நம் அரசின் செயல்பாட்டில் ஒன்று. 2021-ஆம் ஆண்டு நம் அரசு பொறுப்பேற்றவுடன் பத்திரிகையாளர்களின் குடும்ப உதவி நிதி ரூபாய் 3 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தப்பட்டது. பத்திரிகையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அந்த நிதியை கடந்த ஆண்டு மீண்டும் நம் முதலமைச்சர் அவர்கள் 10 லட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்.

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு எத்தனையோ அடையாளங்கள் இருந்தாலும் தவிர்க்க முடியாத, மறக்க முடியாத அடையாளம் என்றால் அவரது பேனாவை சொல்லலாம். அதுபோன்று இங்கு வந்திருக்கக்கூடிய பத்திரிகையாளர் நண்பர்கள் அனைவருக்கும் பேனாவை தான் அடையாளமாக சொல்லலாம். அந்த உரிமையோடு விளையாட்டு துறை அமைச்சர், துணை முதலமைச்சர் என்பதை விட நானும் ஒரு பதிப்பாளர், பத்திரிகை துறையுடன் தொடர்பு கொண்டவன் என்ற உரிமையோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவருடைய மூத்த பிள்ளை முரசொலியில் நான் தலைமை நிர்வாகியாக பல வருடங்கள் பணியாற்றி உள்ளேன். முரசொலியின் தலைமை நிர்வாகியாக அண்ணன் தயாநிதி மாறன் அவர்களுக்குப் பிறகு சில ஆண்டுகளாக தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்று, பணியாற்றியுள்ளேன். இப்போது கூட முரசொலியில் கடைசி பக்கத்தில் இளைஞரணியின் சார்பாக முத்தமிழ் அறிஞர் பதிப்பகத்தின் சார்பில் பாசறை பக்கம் வாயிலாக நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகின்றோம்.**

### சிறப்பு ஊக்கத் தொகை ரூ. 2.89 கோடி

கொரோனா நேரத்தில் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மொத்தமாக இதுவரை 2 கோடியே 40 லட்சம் ரூபாய் இழப்பீடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கொரோனா நேரத்தில் உயிரைப் பணயம் வைத்து பணி செய்த 6 ஆயிரம் பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக மொத்தம் 2 கோடியே 89 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர கட்டணமில்லாப் பேருந்துப் பயணம், செய்தியாளர் அங்கீகார அட்டை என ஏராளமான பயன்களை நம் அரசின் சார்பாக பத்திரிகையாளர்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறோம். இப்படி பத்திரிகையாளர்களின் நலனில் நம் அரசு தொடர்ந்து, பார்த்துப் பார்த்துச் செயல்பட்டு வருகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த சென்னை பத்திரிகையாளர் மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றீர்கள். அப்போது ஒரு முக்கியமான கோரிக்கையையும் வைத்தீர்கள்.

### உட்கட்டமைப்பைச் சீரமைக்க ரூ.2.5 கோடி

பிரஸ் கிளப்பின் உட்கட்டமைப்பை மேம்படுத்திச் சீரமைக்க, அரசு சார்பாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று, பல்வேறு கோரிக்கைகளில் இதை முக்கியமான கோரிக்கையாக வைத்திருந்தீர்கள். அதை நிறைவேற்றுகின்ற வகையில், நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட என்னை அறிவுறுத்தியுள்ளார்கள்.

சென்னை பத்திரிகையாளர்கள் மன்றத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்துகின்ற வகையில், நம் அரசு சார்பாக ரூபாய் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்ற தகவலை இந்த நேரத்தில், இந்த மேடையில் உங்கள் முன்பு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (பலத்த கைதட்டல்)

உங்களின் மற்ற கோரிக்கைகளுக்கும் விரைவில் படிப்படியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை, இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

இந்த விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்ட அத்தனை பேருக்கும், இதை நடத்திக் காட்டியவர்களுக்கும், இதில் வெற்றிபெற்ற அத்தனை பேர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றோர்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், விஜய் வசந்த், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அண்ணாதுரை, சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் சுரேஷ் வேதநாயகம் மற்றும் பத்திரிகையாளர் மன்ற நிர்வாகிகள் உள்பட பத்திரிகையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.